# எதிர்காலத்தை குறித்த பயத்தோடு மன அழுத்தத்தில் சோர்வோடு இருக்கும் போது தேவன் அளிக்கும் ஆறுதல் - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்:**...இன்றைக்கு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சியில், பதினேழு வயது நிரம்பிய சுறுசுறுப்பான வாலிப பெண் குதிரை சவாரியை விரும்புபவள், ஹாக்கி நீச்சலும் பிடிக்கும், ஒருமுறை ஆற்றில் குதிக்கும்போது தனது தண்டுவடத்தை உடைத்துகொண்டாள். பலவித அறுவை சிகிச்சைகளுக்கு பிறகு தன்னால் நடக்கவும் தனது கரங்களை பயன்படுத்தவும் முடியாது என்பதை அறிந்தால், அவர் இனி தனது வாழ்நாள் முழுவதும் சக்கர நாற்காலியில் தான் இருக்கவேண்டும். கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுகளாக ஏமாற்றங்கள் மனஅழுத்தம் எதிர்காலத்தை பற்றிய பயத்திலிருந்து மீண்டு ஜெயமெடுக்க தேவன் ஜோனி எரிக்சன் டாடாவிற்கு எப்படி உதவினார்?

நாற்பது வயது நிரம்பிய மனிதர், கத்துக்கோப்பான உடல் நிலை, வாரத்தில் 3 முறை ராகெட் பந்து விளையாடுபவர், தனகென்று உடலிடை பயிற்சியாளரை உடையவர். எதிர்பாராதவிதமாக தனது பின் பகுதியில் வலியையும் வேதனையையும் உணர்ந்தார், அது அவரை வேதனைமிகுந்த அறுவை சிகிச்சைகளை எதிர்கொள்ள செய்தது

அவருடைய ஜீவனை காக்க மருத்துவர்கள் சில தண்டு வட அடுக்குகளை அகற்றி எழும்புகளை இணைத்தனர்.

இன்றைக்கு Dr. மைகேல் எஸ்லே, வேதாகம கழகத்தின் நிறுவனர் தலைவராக இருக்கிறார், மேலும் ஜோனி எரிக்சன் டாடா இருவரும் தங்களுடைய ஏமாற்றமான மன அழுத்தம் பயம் நிறைந்த சூழ்நிலையில் தேவன் எப்படி அவர்களுக்கு ஆறுதல் அளித்தார் என்பதை நம்மோடு பகிர்ந்துகொள்ள இருக்கிறார்கள். இந்த விசேஷித்த ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நா ஜோனி எரிக்சன் டாடாமற்றும் Dr. மைக்கேல் எஸ்லே உடன் பேசிகொண்டிருக்கிறேன். நம்ம எல்லாருக்குள்ளும் இருக்கிற ஒரு பயம் அதிலிருந்து ஆரம்பிக்க விரும்புகிறேன். ஆனா அந்த பயம் ஒருசிலருக்கு மற்றவர்களைவிட மிக அதிகமாக இருப்பதை பார்க்க முடியும். அதுதா மரண பயம். நமக்கு வியாதிகள் வந்திருக்கிறது. நா மரணத்தை எதிர்கொண்டிருகிறேன், இவங்க இரண்டு பேரும் பிழைத்து வருவோம் என்கிற நம்பிக்கை இல்லாத மரண வாசலை அணுகினவர்கள். நீங்க உங்களை தேவனுடைய கரங்களில் ஒப்புகொடுத்துட்டீங்க. அந்த அனுபவத்தை பற்றி நீங்க பகிர்ந்துகொள்ளும்படி விரும்புகிறேன் தேவன் உங்களுக்கு என்ன

செய்தார். சரி, மைகேல், மரண பயம் அப்பறம் தேவன் அதற்கு பதில் தரும் நிலை இதிலிருந்து ஆரம்பிக்கலான்னு நினைக்கிறேன்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**...என்னுடைய நண்பருக்கு 2 நுரையீரலும் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது, அது சுமார் 12 மணிநேர அறுவை சிகிச்சை. அவ எங்கிட்ட அறுவை சிகிச்சைக்கு முன்னால நடக்கிற காரியங்களை பகிர்ந்துகொண்டான், அங்க, என்ன நடந்தது அவனுக்கு கவுன் கொடுத்து, எல்லாம். எங்கிட்ட சொல்லும்போது, சொன்னா கடைசியில் உங்க மனைவிய கூட்டீட் வந்து காட்டுவாங்க, அவங்க உங்கள ஆப்ரேஷன் தியேட்டருக்கு கொண்டு போறதுக்கு முன்னால அவங்ககிட்ட பேச வாய்ப்பு கிடைக்கும் என்றான். அதோடு அவன் உன்னோட கடைசி செயல் உன்னோட கையில் இருக்கிற திருமண மோதிரத்தை கழற்றி உன் மனைவி கையில கொடுக்க வேண்டியிருக்கும், அவளோட கன்னத்துல ஒரு முத்தம் கொடுக்கலாம் என்றான். அதற்கு பிறகு, உன்ன அப்படியே தள்ளீட்டு போவாங்க, வெறும் விளக்குகளின் ஒளியில், கவுன் மற்றும் மாஸ்க் அணிந்திருக்கும் இரண்டு அந்நிய மனிதர்கள் தள்ளீட்டு போவாங்க. “ அவ எங்கிட்ட சொன்னா.... நீ எல்லாருக்கும் குட் பாய் சொல்லணும் உன் பிள்ளைகள், உன் மனைவி, என்னன்றத தெரிஞ்சவங்களுக்கு சொல்லமுடியுமா? அப்பறம் அவ சொன்னா, “நானும் கிறிஸ்துவும் மட்டும் தான். நா உயிரோட வந்தா, அவருக்காக உழைத்திடுவேன், அப்படி இல்லைன்னா, அவரோடு கூட இருப்பேன்.”

அந்த காரியம் எனக்கு வருத்தத்தை அளித்தது. ஒவ்வொரு நாளும், உண்மையாக, அந்த மயக்க மருந்து கொடுக்கப்படும்போது, நம்முடைய உடல் நிலையை நமக்கு நினைப்பூட்டுகிற, விஷயமா இருக்கும், இப்ப அத சொல்லும்போதே அந்த காரிடார்ல போற அனுபவம் போல இருக்குது.

**ஆன்கர்பெர்க்:** ஒரு கேள்வியை கேட்டிற்கும் நபருக்கு முதலாவது பதில் சொல்லிலாமா, அவர் கேட்கிறார், நா விழித்தெழும்போது இயேசுவை பார்ப்பேனா என்று தெரியவில்லை. அடுத்த பக்கம் என்ன இருக்கிறது என்று தெரியாததால் எனக்கு பயமாக இருக்கிறது." சுவிசேஷத்தின் நற்செய்தி என்னவென்று சொல்ல முடியுமா?

**எஸ்லே:**...சரி, நமக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வார்த்தைகள், என் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து என்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு." இது, உன்மைதான, வேதாகமத்தில் பல இடங்களில் நாம நமது நம்பிக்கையை, விசுவாசத்தை கிறிஸ்துவின் மீது கொண்டிருக்கனுன்னு சொல்லப்பட்டிருக்கிறது, அவர் ஜீவித்ததும், மரித்ததும், அடக்கம் பண்ணப்பட்டு பின்பு உயிர்த்ததும் நமக்காக தான. கிறிஸ்துவை விசுவாசிக்கிற எல்லாரும் யாரானாலும் சரி, கிறிஸ்துவை மட்டும் நம்பினால், அவங்களுக்கு நித்திய ஜீவன் என்ற ஈவு காத்திருக்கிறது. இவை அனைத்தும் எழுதப்பட்டிருக்கிறது, யோவான் சொல்கிறார்,

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டாயிருக்கும் படி இவை அனைத்தும் எழுதப்பட்டிருகிறது என்கிறார். என்னுடைய நம்பிக்கை, ஜோனியுடைய நம்பிக்கை, உங்க நம்பிக்கை, கிறிஸ்துவோடு ஒரு சந்திப்பு உண்டாகப்பெற்ற அனைவருக்கும் ஒரு விஷயம் தெரியும், நாம ஒருவேளை மரண வேளையை நினைத்து பயப்படுகிறவர்களாக இருந்தாலும், இப்ப எனக்கு அந்த நேரத்தை பற்றிய பயம் இல்லை - ஏன்னா இதற்கு பிறகு ஒரு வாழ்க்கை இருக்குது. ஆனா, இன்னும் இந்த நிலைக்கு வராமல் இருக்கிறவர்களை நினைக்கிறேன், இதுதான் அவங்களுக்கு இருக்கிற ஒரே நம்பிக்கை, அவங்க தங்களுடைய இரட்சிப்பிற்காக அவரை கிறிஸ்து ஒருவரை மட்டும்தான் நம்பி யாக வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. ஜனங்கள் சொல்றத நாம கேட்டிருக்கிறோம், அதாவது, இந்த நபரை எனக்கு தெரியும் அவரை என்னுடைய வாழ்வில் நான் நம்பியிருக்கிறேன். அப்ப நா ஆபிரகாமை பற்றி யோசிக்க ஆரம்பித்தேன். ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், தேவன் அதை பார்த்தார் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. நா யோசித்து பார்த்தேன், ஏன் நம்மளால கண்ணமூடீட்டு தேவனை நம்ப முடிவதில்லை. அவர் கிறிஸ்துவை அனுப்பியபோது, கிறிஸ்து சகலத்தையும் முடித்துவிட்டார், அவர் சிலுவையில் செய்த காரியமே போதுமானதாக இருந்தது. கிறிஸ்து நமக்காக செய்த காரியத்திற்கு நிகராக நம்மால் எதையுமே செய்ய முடியாது. அவர் பரிபூரணமான

வாழ்க்கையை கொண்டிருந்தார் அப்படிதான் நம்முடைய பாவத்திற்கான விலையை செலுத்தினார். நம்முடைய பாவங்களை எடுத்துகொண்டு தமது நீதியை நமக்குள் வைத்தார். இயேசு கிறிஸ்துவின் கிரியை வைத்துகொண்டு தேவனுக்கு முன்பாக என்னால் நிற்க முடியும் என்றால், அது பூரணமானதாக இருக்கிறது. அந்த மாதிரியான நேர்த்தியான நீதிதான் நமக்குள்ளாக வைக்கப்பட்டிருக்கிறது… இந்த ஈவை தேவன் நமக்கு தருவார் என்று நாம் அவரை நம்பினால் மட்டும் போதும். நாம அநேக ஜனங்களை நம்புகிறவர்களாக இருக்கிறோம்; நாம் தேவனை நம்புவதில்லை.

**எஸ்லே:**…இப்ப, ஒவ்வொரு மனிதனுக்குள் ஒரு உள்ளான கருத்து இருக்கிறது, செய்யலாம் செய்ய கூடாது என்ற சமநிலை. தவறான காரியத்தை தான் செய்வேன், ஆனா அதற்கு ஈடுகட்டும் படி நல்ல காரியத்தையும் செய்திடுவேன். எப்போதுமே நமது பாவங்களை ஈடு செய்யும்படி நல்ல விஷயங்களை செய்ய முயலுகிறோம், செய்யணுன்னு முயலுகிறோம், அல்லது அதற்கு மேல நல்லவராக காட்டிகொள்கிறோம். நாம ஏற்க்கனவே சொன்னது போல, நாம எல்லாருமே நரகத்தை நோக்கி பாய்ந்து கொண்டிருக்கும் ரயிலில் இருக்கிறோம். மனுக்குலத்தின் முடிவே நரகமாக இருக்கிறது, நம்பிக்கை விசுவாசம், கிறிஸ்துவின் மீது நம்பிக்கை என்பதெல்லாம் அப்பாற்பட்ட விஷயங்கள். கைவிட்டு விடுகிறோம்… தேவன் விரும்புகிறபடி என்னால் இருக்க முடியாது. ஆனா தேவன் தமது

குமாரனை அனுப்பினார் எனக்கு பதிலாக அவர் மரித்தார், எனது சார்பில், எனக்கு பதிலாக அவர் சிலுவையில் செய்த காரியத்தினால் நான் மன்னிப்பை பெற்றுகொண்டேன். அது நல்ல செய்திதான.

**ஆன்கர்பெர்க்:** உண்மையில் நற்செய்தி தான்.

**எஸ்லே:**...அது ரொம்ப எளிமையானதென்று நான் நினைக்கிறேன், சிலவேளைகளில் ஜனங்கள் தடுமாறுகிறார்கள் ஏன்னா இதை தவிர ஒன்றும் செய்யமுடியாது என்ற நிலை வரும்போது அவங்க ஏதாவது செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள்.

ஜோனி எரிக்சன் டாடா:...அதாவது, தேவன் உபத்திரவத்தை அனுமதிப்பதற்கு இதுவும் ஒரு காரணம் என்று நான் நினைக்கிறேன், குறிப்பாக அவிசுவாசிகளுக்கு, ஏன்னா நீங்க பாடுகள் வழியாக பிகும்போது, அது எச்சரிப்பு மணி ஒலிப்பது போல இருக்கும், சிவப்பு கோடி பறப்பது போல இருக்கும், சிவப்பு விளக்கு மின்னிக்கொண்டிருக்கும், “டூ -டூட், டூ -டூட். விழித்தெழனும், ஆவிக்குரிய தூக்கத்தில் இருந்து விழித்து எழும்பவேண்டும். பாடுகள் என்பது  அவிசுவாசிகளின் முகத்தில் தெளிக்கப்படும் குளிர்ந்த நீரென்று நான் நினைக்கிறன், அவங்ககிட்ட கேட்கணும், “கல்லறைக்கு பின்னால் அதின் மறுபக்கத்தில்  உங்களுக்கு என்ன நடக்கும் என்று தெரியுமா? நீங்க இந்த காரியத்தில் என்ன செய்யப்போகிறீர்கள், கிறிஸ்துவின் கூற்றுகளை கேட்டிருக்கிறீர்களா? எனக்கு தெரியல, சாதாரண

மனிதர்களாக, இந்த காரியங்களை யோசிக்க மாட்டோம், அதெல்லாம் உபத்திரவப்படனும் என்பதற்காக அல்ல, நாம் ஆவிக்குரிய நித்திரையில் இருந்து எழும்ப வேண்டும் என்பதற்காக தான்.

**ஆன்கர்பெர்க்:** உங்க நண்பர் டென்னிஸ்ச பத்தி நீங்க சொல்லமுடியுமா, அதாவது மரண பயத்தை குறித்த விஷயம்.

**டாடா:**…ஆமா,டென்னிஸ் எனக்கு தெரிந்த ஒருவர்தான். அந்த ஆறு படுக்கை கொண்ட அறையில் இருந்தவர்களில் அவளும் ஒருத்தி. நடுவுல இருந்த படுக்கை அவளுடையது, எனக்கு எதிர்ல இருந்தா. அவளுக்கு புதுவிதமான வியாதி இருந்தது நரம்பு தசை வியாதி. முடமானவள், குருடாயிருந்தா. ஒரு நாள் காலையில நல்லாதா எழுந்திருச்சா, சுறுசுறுப்பான வாலிப பெண், ஆனா அன்னைக்கு சாயந்தரம் அவளால சுத்தமா நடக்க முடியல. அவளை நா சந்தித்தபோது அவளால அசைய முடியாம இருந்தா, படுத்த படுக்கையாக கிடந்தா, அந்த மாநிலத்தின் அந்த மையத்தில் ஜெரியாடிக் வார்ட்ல இருந்தா. அவளுடைய ஆவி உண்மையில் அற்புதமா இருந்துச்சு. அவளோட அம்மா கிராஸ் டவுன் பஸ் பிடித்தது அவல பார்க்க வருவாங்க, தினமும் வருவாங்க, அவளோட படுக்கை பக்கத்துல உட்கார்ந்து அவளுக்கு வேதத்தை வாசிப்பார்ங்க, நா தூரத்துல இருந்து கேட்டுட்டு இருப்பேன். இந்த வாலிப பெண்ணை பார்த்து நா வியந்திருக்கேன், ஆனா அவளுக்கு இருந்த அந்த

மாதிரியான விசுவாசம் எனக்குள்ள அப்ப இருந்ததை நா பார்த்ததே கிடையாது.

நா அந்த ஸ்டேட் இன்ஸ்டிட்யூஷன்ல இருந்து வெளியில வந்து வாழ்க்கையை தொடங்கினேன்; அதற்கு பிறகு மேரிலான்ட் பல்கலைகழகத்திற்கு சென்றான். ஆனா அவ அந்த மருத்துவமனையில் தான் இருந்தா. அவள பார்க்க ஒவ்வொரு வருஷமும் போவேன், என்னுடைய வருடாந்திர சிகிச்சைக்காக போவேன், ஆனா எட்டாவது வருடம் நா போன போது, முடக்குவாதம் வந்து எட்டு வருடங்களுக்கு பிறகு, டென்னிச பார்த்து வாழ்த்து சொல்ல போனேன், ஆனா அவ அங்க இல்ல. அவ எங்கன்னு அங்கிருந்த நர்ஸ் கிட்ட கேட்ட போது, அவங்க என்னிடம், “ஓ, அவ இறந்ததை நீ கேள்விப்படலையா அவ, இறந்துட்டான்னு சொன்னாங்க. நா அதிர்ந்து போயிட்டேன். அவ எப்பவும் அங்க இருப்பான்னு நினைச்சேன். என்னோடு நண்பர்கள ஒருத்தியிடம் நா போய் பேசினதையும் அவளும் நானும் சேர்ந்து ஒண்ணா வேதத்தை வாசித்ததையும் நினைச்சு பார்த்தேன். “என்னால ஏத்துக்க முடியல. நா கேட்டேன், இந்த வாலிப பெண்தா, அவளோட, அம்மாக்கு இருந்த ஒரே உறவு. அவளோட சாட்சி பலருடைய வாழ்க்கையில் தாக்கத்தை உண்டாக்காம இருந்திருக்கலாம். அவள பார்க்க வர்றவங்க கொஞ்சம் பேர்தான். எட்டு வருஷமா குருடா முடமா  படுக்கையில், இருந்தா. இதுல என்ன அர்த்தம் இருக்கிறது?

எனக்கு நினைவிருக்கிறது, என்னுடைய நண்பர் வேதத்தில் ஒரு பகுதியை எனக்கு எடுத்து காட்டினார்: எபேசியர் 3:10: “உன்னதங்களில் உள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடையது அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.” இதை வைத்து பார்க்கும்போது, அவர் சொன்னார் டென்னிஸ் வாழ்க்கை தேவன் இந்த பாடத்தை நமக்கு கற்றுகொடுக்க பயன்படுத்திய ஒரு கரும்பலகை போல இருக்கிறது என்றார். என்னமாதிரியான பாடம் என்றால், “என் கிருபை உனக்கு போதும்.” அவள் உயிர் வாழ தேவையான பெலத்தை நான் தந்திடுவேன்.” எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை அவளுக்கு கொடுப்பேன்.” அதோட, ஜோனி, என்னுடைய நண்பர் சொன்னார், “தூதர்களும் பிசாசும் ஆயத்த நிலையில் நின்றுகொண்டு இந்த சூழ்நிலைக்கு நீ எப்படி மறுவுத்திரம் கொடுக்க போரேன்றத பார்க்க ஆவலாக நிற்கிறார்கள் என்றால், டென்னிஸின் பதில் எப்படி பட்டதாக இருந்திருக்கும். அதனால, அவளுடைய உபத்திரவம் வீணாயிற்றே என்று கவல படாத, ஏன்னா அந்த எட்டு ஆண்டுகளும், குருடும் முடமுமாக இருந்த அவளுடைய அசவுகரியமான நிலையை விட மேலானதான நித்திய பலனை அவள் தனக்காக சேர்த்துக்கொண்டால். அது உனக்கும் பொருந்தும், ஜோனி, அவளுக்கு அது உண்மையாயிருந்தா, உனக்கும் இருக்கும் என்றார்.”

அதனால, உன்னுடைய உபத்திரவத்தில் தனிமையாக இருக்கிறன்னு நினைக்காதீங்க. தூதர்கள், பிசாசுகள், பல கோடி கணக்கானா லட்சக்கணக்கான, கண்ணாரக்கான முடியாத பல மில்லியன்களான ஜீவன்கள் உன்னை பார்த்து தேவனுடைய மேன்மையை மகத்துவத்தை பற்றி உன்னுடைய கீழ்படிதல் தேவன் மீது உனக்கு இருக்கும் விசுவாசத்தின் மூலம் கற்றுகொள்கின்றன. ஏன்னா ஒவ்வொருநாளும், இந்த பூமியில் நாம் செய்கிற ஒவ்வொரு காரியத்திலும், அதற்கென்று ஒரு விளைவு இருக்கிறது, அதற்கேற்றவாறு, நம்முடைய சந்தோஷம் ஆராதனை செயல்பாடு அனைத்தும் பரலோகத்தோடு தொடர்புடையதாக இருக்கிறது. டென்னிஸ் தன்னுடைய கணக்கில் எத்தனை பலன்களை சேர்த்துவைத்திருக்கிறாள் என்று பார்க்க ஆவலோடு இருக்கிறேன், அவ அது எல்லாத்தையும் இயேசுவின் பாதத்தில் அற்பணித்திடுவாள்.

**ஆன்கர்பெர்க்:** இப்ப ஒரு முக்கியமான காரியத்தை கேட்க விரும்புகிறேன், ஏன்னா உங்களா மாதிரி பாதிக்கப்பட்டவங்க நிறைய பேர் கடந்த சில நாட்களில் என்னை சந்தித்து கேள்வி கேட்டாங்க: நா உயிர்வாழ்றதுல என்ன அர்த்தம் இருக்கிறது? எங்கிட்ட சொன்னாங்க, “ஜான், நாபடுத்த படுக்கையா இருக்கேன், ஏன் பிள்ளைகளுக்கு இதனால பிரச்சனை, என்னால ஒன்னுமே செய்ய முடியாம இருக்கேன். என்னுடைய மனைவி ரொம்பவே சோர்ந்துபோயிருக்கா, என்ன நல்லா பாத்துக்கனுன்னு நினைக்கிறா. நா உதவியற்றவனாக

உணருகிறேன் என்னால ஒன்னுமே செய்ய முடியல. ஏ, வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் என்ன மதிப்பு இருக்குதுன்னு கேட்க்கிறாங்க. அப்படிப்பட்டவர்களுக்கு உங்களுடைய பதில் என்ன?

**டாடா:**...ஆமா, நீங்க இந்த சுவாரஸ்யமான கேள்வியை கேட்டதில் சந்தொஷபட்டுகிறேன். ஒரு நாள் நா என்னுடைய நண்பர்களில் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன், படுக்கையில், முடமாக, தீராத வேதனையில் இருக்கிறார்கள். அந்த நண்பரிடம் நான் பேசும்போது, ஒரு வேதபகுதியை சொன்னேன், சங்கீதம் 10:17, "கர்த்தாவே சிறுமை பட்டவர்களுடைய வேண்டுதலை கேட்டிருக்கிறீர். அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர்." இந்த வசனமும் இன்னும் சில வசனங்களும் சிறுமைப்பட்டவர்களுடைய ஜெபம் வல்லமை உள்ளது என்பதை எடுத்து கூறுகிறது. தேவனோடு ஒரு விசேஷித்த தொடர்பு எங்களுக்கு இருக்கிறது. மற்றவர்களுக்கு அனுமதிக்கபடாத ஏதோவொரு சிங்காசனம் இருக்கிற ஒரு அறைக்குள் பிரவேசிக்கும் உரிமை எங்களுக்கு மட்டும் இருக்கிறது. சிறுமைப்பட்டவர்கள் மற்றவர்களுக்காக தேவனிடத்தில் பரிந்து பேச நிற்கும்போது வரும்போது, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை தேவன் குனிந்து கவனிக்கிரவராக இருக்கிறார் என்று நினைக்கிறேன். மிகவும் கவனமாக, மிகவும் ஊக்கமான ஜெபங்கள், என்னுடைய நண்பரிடம் நான் சொன்னே, தேவனுக்கு முன்பாக நீ செய்யும் வேண்டுதல், தேசத்தின் இலக்கில் ஒரு அசைவை உண்டாக்கும், பாவத்தை

வேரோடு பிடுங்கிடும், அரண்களை நிர்மூலமாக்கும், பரிசுத்தவான்களை ஊக்குவிக்கும், அருட்பணியாலர்களுக்கு ஜெயத்தை கொண்டுவரும் என்று கூறினேன்.

உங்க வாழ்க்கையில் இருக்கிற அந்த ஜெபத்தின் வல்லமையை குறைவாக மதிபிடாதிருங்கள். அவர் சிறுமைபட்டவர்களின் ஜெபத்திற்கு செவி கொடுக்கிறார். படுகையில் இருக்கும் வியாதியஸ்தர்களை அவர் தாங்குகிறார் ஏன்னா அவங்க அதிக பாரத்தோடு அவரை நோக்கி கதறுகிறார்கள், மிகுந்த வல்லமை கொண்டவர்கள், அந்த ஜெபங்கள் மிகவும் முக்கியமானவைகள். ஜெபம், அது பெரிய காரியம்தான். நா பரலோகத்திற்கு போனதுக்கு பிறகு எட்டாம் வசனத்தால என் தலையில் அடித்துக்கொள்ள விரும்பவில்லை. “ஓ, ச்ச, நா ஏ அத செய்யாம போயிட்டேன்? அங்க போய் யோசிக்கிறத நா விரும்பல, அதோட, அடடா என்னோட, ஜெபத்தால இத செய்திருக்கலாமே என்று தோணுமே? இல்லையா? இன்னும் அதிகமா ஜெபித்திருக்கலாமே? இந்த உபத்திரவங்கள் நாம ஜெபத்தின் முக்கியத்துவத்தை காணும்படி அந்த எல்லைக்கு நம்மை தள்ளி செல்வதாக இருக்கிறது. அப்பதா நாம முழங்கால் படியிட்டு ஜெபிக்க துவங்கிடுவோம்.

**ஆன்கர்பெர்க்:** உங்களில் சிலர், உங்க வாழ்க்கையில் இந்த நிலைக்கு வந்திருக்கலாம், உங்க வாழ்க்கையில் உங்க உடல் உங்களுக்கு ஒத்துழைப்பு குடுக்காம இருக்கிற நிலை. அப்ப என்னோடு

முடிவு வந்துடுச்சுன்னு நீங்க நினைக்க கூடும். இப்ப உங்களுக்கு என்ன மதிப்பு இருக்கு? அப்ப நீங்க என்ன செய்வீங்க? எப்படி தொடர்ந்து வாழ முடியும்? ஜோனி, எப்படி உண்மையாய் தேவனை மகிமை படுத்தமுடியும் தேவனால் எப்படி பயன்படுத்தப்பட முடியும், மற்ற கிறிஸ்தவர்களை காட்டிலும் இந்த சூழ்நிலையில் எப்படி,தேவன் பயன்படுத்துவாருன்னு சொல்லுங்க.

**டாடா:**...எனக்கு தெரிந்த ஒரு சகோதரியை பத்தி நினைத்துபார்க்கிறேன் அவங்க பேர் கிளாரா, கிளாரா லார்சன். அவங்களுக்கு ஜுவேனிலீ டயாபிடீஸ் வியாதி. அவங்க ஓரிரு விரல்களை இழந்துவிட்டார்கள்; இரண்டு கால்களும் தளர்ந்துவிட்டது; சிறுநீரகம் மாற்றப்பட்டுள்ளது, மாரடைப்பு, எடீமா, சீரற்ற நரம்புகள்; கிட்டத்தட்ட குருடு. ஓ, மை குட்னஸ், இந்த சகோதரியை சந்திக்க நேர்ந்தது. அப்ப, அவங்கள சந்தித்தபோது, ஆச்சரியாமான விஷயத்தை சொன்னேன், “கிளாரா, நீங்க இத கடந்துவந்திருப்பத என்னால நம்ப முடியல.” அதற்கு அவங்க பதில் சொன்னாங்க, “ஆமா, ஜோனி, என்னுடைய எல்லா அவயவங்களையும் நா இழப்பதற்கு முன்பு இங்கு வருவது மேலென்று நினைத்தேன் என்றார்கள்.” இந்த பெண்மணிதான், அவங்க, ரெட்ரீட் முடிந்து போனதும், இந்த ரொம்ப சந்தோஷமா இருந்தாங்க, போனபிறகு எனக்கு ஒரு பரிச அனுப்பினாங்க. அவங்களுடைய செயற்கை கால், அதில் ஒரு குறிப்பை எழுதி அனுப்பினாங்க, என்ன இருந்துதுன்னா, “என்னுடைய எல்லா

பாகங்களும் எப்போதும் உங்கள் எல்லார் கூடையும் இருக்க முடியாது, அதனால என்னில் ஒரு அங்கம் மட்டும் இருக்கட்டும்.” என்னவொரு அருமையான சகோதரி.

முதல் ரெட்ரீட்ல அவங்க அவ்வளவு சந்தோஷமா இருந்ததா தெரியல. கொஞ்சம் சொகமாதா இருந்தாங்க. கொஞ்சம் தளர்ந்து போயிருந்தாங்க, நிரைய இழப்புகள் பலவிதமான மரணத்திற்கு நேரான அறுவை சிகிச்சைகள். அவங்க ரொம்ப போராடிட்டு இருந்தாங்க. அதனால, நா சொன்னே என்னோட கரங்கள் எனக்கு வேலை செய்யாது, “ஆனா நீங்க, உங்களுக்கு இருக்கும் சில விரல்களை வைத்து, வேதாகமத்தை எடுத்து பிலிப்பியருக்கு திருப்ப முடியுமா? அங்க பவுல் சொல்லுகிற காரியத்தை நீங்க வாசிக்க விரும்புகிறேன் என்றேன். ஏன்னா அவருக்கு ஒன்று புரியல இந்த தேகத்தை விட்டு பிரிந்து தேவனோடு இருப்பது நல்லதா, இது நல்லதா. இவை இரண்டிற்கும் நடுவில் அவர் தடுமாறினார். அதற்கு பிறகு, கிளாரா, அடுத்த வசனத்தை பாருங்களேன். அங்கு சொல்கிறார், “நான் இந்த தேகத்தில் இருப்பது உங்களுக்கு அவசியமாக இருக்கிறது.” நா சொன்னேன், கிளாரா, நீங்க திகைத்து நிற்கிறீர்கள், உங்களுடைய நோக்கம் என்ன, என் இப்படி என்று. ஆனா உங்களுக்கு முன்னால இருக்கிற நர்சுக்கு இயேசுவை பற்றி தெரியாது. கிளீனிக் ல இருக்கிற பெண்களுக்கு, உங்களை உயிருக்கு உயிராக நேசிப்பவர்கள் உங்களுடைய நகைச்சுவை உணர்வை விரும்புகிறவர்களுக்கு இயேசுவை பற்றி தெரியாது. தேவன்

உங்கள் மூலமாக செயல்பட விரும்வுகிறார், கிளாரா. உங்களை சுற்றி பல பேர் இருக்கிறார்கள். நீங்க இருக்கவேண்டியது அவர்களுக்கு அவசியமாக இருக்கிறது அதனால சீக்கிரமா இங்கிருந்து போயிடனுன்னு நினைக்காதீங்க. சரி, கிளாரா, என்னோட நீங்களும் உறுதியா நிர்ப்பீங்களா, என்னோட சேர்ந்து, உங்களை போன்ற அநேகர், விடாமுயற்சியோடு நின்றுகொண்டிருக்கிறார்களே? நீங்க கொஞ்சம் கிறிஸ்துவுக்காக விடாமல் உறுதியாக நிர்ப்பீர்களா, நரகத்தின் பிடியில் இருக்கும் ஆத்துமாக்களின் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் விரிவடையும்படி உறுதியாக நிர்ப்பீர்களா என்றேன்.

அவங்க, அந்த மாதிரி யோசித்தது கிடையாது. ஆனா, உண்மையா, இது அப்போஸ்தலர்களின் வார்த்தைகள் தான். நாம நம்முடைய வேதனை நிறைந்த சரீர உபாதைகளோடு இருப்பது மற்றவர்களுக்கு அவசியமாக இருக்கிறது என்கின்றனர். நம்முடைய சேவை மற்றவர்களுக்கு தேவை, நம்முடைய குடும்பம், நண்பர்கள்; அயலகத்தார், வியாபாரத்தில் இருப்பவர்கள், கல்லூரி மக்கள்; வேலை ஸ்தலத்தில் உள்ள நபர்கள்; கல்லூரி வளாகத்தில் இருக்கிற கேபிடீரியா பெண்கள். அதாவது, அநேக ஜனங்கள் இருக்கிறார்கள். சலவை செய்யும் இடத்திலுள்ள பெண்கள், ஜெல்சன் கடைவீதியில் இருக்கும் பைகள் விருக்கிற பையன். நாம பெற்றுகொண்டிருக்கிற ஒரு விஷயத்திற்காக பசிதாகதோடு இருக்கிற அநேகர் நம்மை சுற்றிலும் வாழ்ந்துகொண்டிருகிரார்கள். கிளாரா தேவனோடு இருக்க போவதற்கு

முன்பு சுமார் நான்கு ஆண்டுகள் அங்கு தான் இருந்தார்கள், ஆனா, ஓ, எத்தனை ஆத்துமாக்களை அவங்க பரலோகத்திற்கு தன்னுடைய கண்ணக்கில் கொண்டு சென்றார்கள் தெரியுமா.

**ஆன்கர்பெர்க்:** எங்க அம்மாவுக்கும் லோ கீஹிர்க் வியாதி வந்தது ஞாபகமிருக்கு அவங்களால பேச முடியாம போயிடுச்சு, அப்பறம் நடக்க முடியாமல் போயிடுச்சு. அப்பறம் இன்னொருத்தருடைய உதவி அவங்களுக்கு அதிகமா தேவைப்பட்டது. அவங்கள தொலைபேசியில் தொடர்புகொண்டது நினைவிருக்கிறது, அவங்க கம்ப்யூட்டர்ல டைப் அடிக்கிற சத்தம் மட்டும்தான் எனக்கு கேட்க்கும். அவங்க எனக்காக ஒரு சிறிய ஜெபத்தை டைப் பண்ணுவாங்க, அந்த மெட்டாலிக் மெஸ்ஏஜ்ல அவங்களோட மெஸ்ஸேஜ் வரும். என்னோட அம்மாவை பத்தி பல விஷயங்கள் என்னுடைய நினைவில் இல்லை, ஆனா ஒன்ன மட்டும் சொல்வேன், ஒன்னு மட்டும் நினைவிருக்கு. அந்த மாதிரியான சூழ்நிலைகளில் நீங்களும் இருக்கலாம், ஆனா அவங்க அத ஒரு பெரிய விஷயமா பார்க்கவே இல்லை. உண்மையதா சொல்றேன், என்னால அவங்கள, மறக்கவே முடியாது.

ஜோனி, இப்ப இங்க வரலாம். இந்த மாதிரி இருக்கிறவங்கள, பராமரித்து வருகிற குடும்பத்தினர்களை பற்றி பேசலாமா முடமாக இருப்பவர்களின் குடும்பத்தினர் அல்லது லூ கீஹர்க் மல்டிபல் ஸ்கீரோசிஸ், இது அவங்கள வாதிப்பதாக இருக்கலாம். நீங்க

பராமரிக்கிற நபரை நீங்க நேசிப்பீங்க, ஆனா கொஞ்ச நாள் ஆக ஆக நாட்கள் செல்ல செல்ல ஒருவித சோர்வு உண்டாகலாம். சிலருக்கு அது எப்படி இருக்குன்னா, ஒரு நேரம் வரைக்கும் அவங்க எல்லாத்தையும் சிறப்பாக செய்ய முயற்சி செய்வாங்க. மேலும் ஒருசிலர் எப்படின்னா, ஒரு குறிப்பிட்ட நேரம் வந்தது, சில நாட்கள்ல, அவங்களுக்கு அது அதிகப்படியான விஷயமாக தெரியும். அதனால அவங்க சொல்வாங்க, :என்னால முடியாது, இதுக்கு மேல என்னால பாத்துக்க முடியாது." இதுல பிரட்சனை என்னன்னா அப்படியே விட்டு விட முடியாது. அப்படிப்பட்டவர்களுக்கு உங்களுடைய ஆலோசனை என்ன?

**டாடா:**…சரி, முதல்ல படுக்கையில் இருந்து பராமரிக்கப்பட்டு வருகிறவர்களுக்கு ஒரு விஷயத்தை நான் சொல்லிட விரும்புகிறேன். நீங்க தேன்க் யூன்னு சொல்லி பழகுங்க. அந்த நபரிடம்நீங்க கனிவாக நடந்துகொள்ளுங்கள். நீங்க கோபப்படுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஓ மை குட்னஸ், தேவன் உங்களை போஷிக்கும்படி இந்த நபரை உங்கள் வாழ்வில் வைத்திருக்கிறார், உங்கள திருப்பி படுக்க வைக்க, உங்க தலையணையை சரி படுத்த, உங்க படுக்கை உரைகளைமாற்ற , துணிகளை துவைக்க. அவங்ககிட்ட அன்பா நடந்துக்குங்க. ஒருவர் என்னிடம் ஒருமுறை சொன்னாங்க, "ஜோனி, உங்க சகோதரி உங்களுக்கு வாழ்க்கை எப்படி யதார்த்தமானதாக தெரிய வேண்டும் என்பதற்காக தன்னையே வருத்திக்கொண்டு உங்கள நல்லா

பாத்துக்கிறாங்க, ஆனா உன்னால அவங்ககிட்ட, தேன்க் யூன்னு சொல்ல முடியல.” அப்படி சொல்லீட்டு திரும்பி என்னுடைய அறையை விட்டு வெளியேறிவிட்டார். என்னுடைய கன்னம் அவன் மேல இருந்த கோபத்துல சிவப்பாயிடுச்சு. ஆனா அவங்க எனக்கு நல்ல விஷயத்தை தான் செய்திருக்காங்க. இன்றைக்கு வரைக்கும் என்னுடைய சகோதரியை நா அதிகமா நேசிக்கிறேன், இப்ப ரொம்ப கவனாமா இருந்து, தேன்க் யூன்னு சொல்றேன்.”

ஆனா பராமரிப்பவர்கள், உங்கள் சொல்லுகிறேன், மற்றவர்களுடைய உதவியை பெறுவது மிகவும் அவசியம். அதாவது, நாம எல்லாரும் பெருமை கொண்டவர்கள். அதாவது எல்லாத்தையும் மாட்டி கொண்டு ஆயத்தமாக, நெஞ்சை நிமிர்த்தி நின்று தொப்பையை உள்ள தள்ள எல்லாத்தையும் சரிபடுத்தி ரொம்ப தயாராக நின்றிடுவோம். நா இத செய்யப்போறேன் என்போம். ஆனா நம்மால முடியாது அப்படி செய்யவும் கூடாது. நாம எல்லாரும் சேவை செய்யும்படி ஒருவருக்கு ஒருவர் உதவும்படி தேவன் ஆவிக்குரிய சமுதாயத்தை வைத்திருக்கிறார். அதனால உதவிகளை கேட்டு செயல்படுவது நல்லது, ஏன்னா கை தொடும் தூரத்தில் இருக்கிற சபையில் இருக்கும் ஒருவருக்கு நீங்க உதவி செய்ய போறீங்க, அவங்ககிட்ட உதவி கேட்ப்பதால அவங்களுக்கு நீங்க சேவை செய்கிறவராக மாறுகிறீர்கள், ஏன்னா இயேசுவும் ஊழியம் கொள்ளும்படி அல்ல, ஊழியம் செய்யவே வந்தார். அதனால் அவர், சபையில் இருக்கும் அந்த நபர், சபையில்

இருக்கும் மற்ற அங்கத்தினர்கள், உங்க வீட்டிற்கு வர வேண்டும். உங்க சமையல் அறைக்கு வரணும்; உங்க படுக்கை அறைக்கு வரணும்; உங்களுக்கு உதவனும்., அது கழிவறையை சுத்தம் செய்வதாக இருந்தாலும், தோட்டத்தை சுத்தப்படுத்துவதாக இருந்தாலும்; ஷாப்பிங்காக இருந்தாலும், துவைப்பதாக இருந்தாலும், டவலை மதிப்பதாக இருந்தாலும், துடைப்பதாக இருந்தாலும் சரி. உங்களுக்கு உதவி அவசியம், அதனால உதவும்படி கேளுங்க. நீங்க இருக்கிற சபையில் நீங்க சவுகரியமா உணராவிட்டால், உங்களுக்கு உதவும்படி கேட்க எங்க சவுகரியமா உணருவீங்களோ அங்க கேளுங்க, அங்க ஒருவேளை அவங்க வந்து உங்களுக்கு வேண்டிய உதவிய செய்திடுவாங்க. ஒருத்தரும் தனிமையில் அவதிபட கூடாது, அது படுகையில் இருப்பவராக இருந்தாலும் சரி பராமரிப்பவராக இருந்தாலும் சரி. ஒருவரும், எந்த தம்பதியினரும், தனிமையாக அவதிபட கூடாது. அதற்காகத்தான் சபை இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** நா பலவித அறுவை சிகிச்சைகளை எதிர்கொண்ட போது என் மனைவி எனக்கு துணையாக இருந்திருக்கிறாள். சின்டி பத்தி சொல்லுங்க, உங்களுக்கு எப்படி இருந்தாங்க; உங்களுக்கு உதவினவர்களை பற்றி சொல்லுங்க; ஏன்னா நீங்க பெருமையானவரா இருந்தீங்க; உங்களால எல்லாத்தையும் செய்ய முடியும்; நீங்க சுறுசுறுப்பான நபர், இல்லையா? உங்கள நீங்களே பார்த்துக்கொள்ள

முடியாத ஒரு இக்கட்டான கட்டத்திற்குள் நீங்க தள்ளப்பட்டிருந்தீங்க அதை பத்தி சொல்லுங்க.

**எஸ்லே:**...அதை பத்தி பேசுவதே கடினமா இருக்கும். வீட்டுல எல்லா வேலைகளையும் நா செய்திடுவேன்,கார், பிரேக்ஸ், வாட்டர் ஹீட்டர், பிளம்பிங் வேலை, மின்சார வேலை; என்னால முடியாதுன்றது எதுவுமில்ல. ஆனா இப்ப சரியா செய்யாம பாதியில் விட்டு செல்கிறவர்களுக்கு பண கொடுத்து செய்கிறேன். ஒரு நாள் சிக்காகோவில் இருந்தேன், மணிக்கு ஐந்து மைல் தூரம் காற்றடிக்கும் ஐசன்ஹோவர் மேல உட்கார்ந்துகொண்டிருன்தேன். அவளுக்கு நா போன் பண்ணினேன், அவளிடம் கேட்டேன், “எப்படி இருக்கிற, ஹனி? ஆயிரக்கணக்கான பெண்கள் முன்பாக நின்று போதிக்கிற ஒரு சிறந்த பெண்மணி எனக்கு பதில் சொன்னா. என்ன சொன்னான்னா, “இப்பதா புல்லுகளை வட்டு முடித்தேன். நா அதிர்ந்து போனேன். நா யோசித்தேன், நீ என்ன மாதிரியான ஒரு கணவன்? இது அவளுக்கு கொடுக்கப்பட்ட வேலை கிடையாது. அதை, பத்தி சொல்றது ரொம்ப கஷ்டம். அவ முறுமுறுத்ததே கிடையாது. சில நேரங்கள் அது அவளுக்கு வெறுப்பாக இருந்திருக்குன்னு எனக்கு தெரியும். சில சமயங்களில் உணர்ச்சி ரீதியில் அவள் வேதனை பட்டிருக்கலாம். ஆனா அவ ஒரு தடவ கூட குறை சொன்னதே கிடையாது. அவ ஒருமுறை கூட என்னிடம் கோபப்பட்டது கிடையாது. ஒரு முறை கூட தன்னுடைய மென்மையாக சுபாவத்தை மாற்றிகொண்டதே கிடையாது.

அறுவை சிகிச்சைக்கு பின், நீங்க வீட்டிற்கு வரும்போது உங்களுக்கு உதவும்படி அங்க நிறைய பேர் இருப்பாங்க, உங்களுடைய தரத்தை இழந்திடுவீர்கள், ஒன்னுமே இருக்காது. வேதனையில் இருப்பீங்க. நீங்க நன்றியுள்ளவர்களா இருக்கனும். ஜோனி சொன்ன மாதிரி... நல்ல ஆலோசனை தந்தாங்க... கனிவோடு இருங்க உங்களை பராபரிப்பவர்களை நேசிக்க பழகுங்கள்.

**டாடா:**...நிச்சயமா.

**எஸ்லே:**...மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு கூட சில சமயங்களில் இது கடினமாக இருக்கும்.

**டாடா:**...அதாவது, என்னுடைய கணவரை அதிகமாய் நேசிக்கிறேன், இது ரொம்ப வித்தியாசமாக இருக்கப்போகிறது, என்னுடைய கழிவறை கடைமைகளை அவர் செய்யும்போது அவரை நான் அதிகமாக நேசிக்கிறேன். அதாவது, அது அவருடைய பழக்கம் கிடையாது. அதில் எனக்கு அதிகமாக உதவுகிற வேறு நண்பர்கள் இருக்காங்க. ஆனா பெரும்பாலான நேரங்களில் என்னுடைய காலை கடன்களில் எனக்கு உதவுவது அவர்தான். என்னுடைய பின்புறத்தை துடைத்து விடுவார், சும்மா படுத்திருப்பேன் அவர் என்னை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை என்னால நம்பவே முடியாது, என்னை அதிகமாக நேசிக்கிறார், ரொம்ப கனிவாக எல்லாத்தையும் செய்திடுவார். நா அவருக்கு என்றென்றைக்கும் கடமை பட்டிருக்கிறேன்.

**எஸ்லே:**…ஆனா இதை ஒத்துக்கணும், இந்த நபர் யாருன்னு தெரியும், நம்முடைய வேலைகளை செய்பவர்கள், உங்களுக்கு கேன், எனக்கு சின்டி, அதாவது, இரண்டாவது யோசனைக்கே இடமில்லை.

**டாடா:**…உண்மை தான்.

**எஸ்லே:**…உங்களாக முடியும் திறமைகள் உடையவர் என்ற நிலை இருந்து இப்ப உதவி அவசியம் என்ற நிலையில் இருப்பது ரொம்ப கஷ்டமா இருக்கு.

**டாடா:**…சந்தேகமற்ற உண்மை.

**ஆன்கர்பெர்க்:** நேயர்களே அடுத்த வாரம் நா ஜோனியிடமும் மைகேலிடமும் கேட்க போகிற காரியம், “தேவன் உங்களை சுகப்படுத்தும்படி விசுவாசத்தோடு ஜெபித்திருக்கிரீர்களா? உங்களுக்கு சுகம் தேவையா? அவர் உங்களுக்கு சுகத்தை தருவார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறதா? என்ன நடந்தது? சுகமடைவதை பற்றி நாம் பார்க்க இருக்கிறாம். தவறாமல் பார்ப்பீர்கள் என நான் நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2013 A.T.R.I.